நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

# நமது தினகனி
NAMADHU DHINA KANI
தமிழ் நாளிதழ்

RNI-TNTAM/2023/88253




| Vol: 02 | Issue: 20 | 4 Pages | 20.8.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 20 | 4 பக்கங்கள் | 20.8.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**நல்லாற்றான் நாடி யருளாள்க பல்லாற்றால்**
**தேரினும் அஃதே துணை**

**விளக்கம்:** நல்ல வழியால் ஆராய்ந்து அருளுடையவர்களாக விளங்க வேண்டும்; பலவழிகளால் ஆராய்ந்து கண்டாலும் அருளே வாழ்க்கைக்குத் துணையாக இருக்கும்.

## டாக்டர்கள் போராட்டம் எதிரொலி: ஜிப்மர் ஆஸ்பத்திரியில் வெளிப்புற சிகிச்சை பிரிவு இயங்கும் நேரம் மாற்றம்



புதுச்சேரி, ஆக. 20

புதுச்சேரி ஜிப்மர் ஆஸ்பத்திரி நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கொல்கத்தாவில் பயிற்சி பெண் டாக்டர் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு எதிராக நாடு முழுவதும் நடைபெற்று வரும் போராட்டங்களின்ஒருபகுதியாகஜிப்மர்மருத்துவர்களும்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் ஜிப்மரின் வெளிப்புற நோயாளி பிரிவுகளில் உள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது.

இதனை கருத்தில் கொண்டு போராட்டங்கள் முடிவுக்கு வரும் வரை, இன்று (திங்கட்கிழமை) முதல் வெளிப்புற நோயாளி பிரிவுகள் காலை 8.00 முதல் 10.00 மணி வரை (வழக்கமாக காலை 8 மணி முதல் 11 மணி வரை) மட்டுமே நடைபெறும். அதாவது 1 மணி நேரம் குறைக்கப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் அவசரமற்ற அல்லது நீண்டகால நோய் சிகிச்சை பெறுவோர் வெளிப்புற நோயாளிகள் பிரிவுக்கு வருவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இதனால் மருத்துவர்கள் அவசர சிகிச்சை தேவைப்படும் நோய்களைக் கொண்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதில் கவனம் செலுத்த முடியும். இன்னும் சில நாட்களில் போராட்டம் முடிவுக்கு வரும் என நம்புகிறோம். அதனைத் தொடர்ந்து முழு வெளிப்புற பிரிவு சேவைகள் வழக்கம்போல்இயங்கும்என்றஅறிவிப்புபொதுமக்களுக்குசெய்தித்தாள் மற்றும் ஊடகங்களின் மூலம் தெரிவிக்கப்படும்.

இது பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். இருப்பினும், மருத்துவ பராமரிப்பு அவசியமாக தேவைப்படும்நபர்களின்கவனிப்புக்குமுன்னுரிமைஅளிக்கும்வகையில் இது மேற்கொள்ளப்படுகிறது. அவசரபிரிவு சேவைகள் அனைத்தும் வழக்கம்போல் இயங்கும். உயிர்காக்கும் பராமரிப்பு தேவைப்படும் அனைத்து நோயாளிகளுக்கும் சரியான நேரத்தில் சிகிச்சை அளிப்பதை உறுதிசெய்கிறோம்.

நோயாளிகள்மற்றும்பொதுமக்களின்நலனுக்காகசுகாதாரசேவைகளை தொடர்ந்து வழங்குவதில் ஜிப்மர் அர்ப்பணிப்புடன் உள்ளது. இந்த இக்கட்டான நேரத்தில் பொதுமக்கள் மற்றும் நோயாளிகள், ஒத்துழைப்பையும் உதவியையும் அளிப்பதன் மூலம் அத்தியாவசிய மற்றும் அவசரமான சேவைகளை அதிகபட்சமாக முடிந்தவரை வழங்க இயலும் என்பதை ஜிப்மர் நிறுவனம் அறிவுறுத்துகிறது. பொதுமக்களின் இந்த ஒத்துழைப்பிற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மராட்டியம்: மசாஜ் செய்ய கூறிய மகன்; மறுத்த தந்தை அடித்து கொலை

நாக்பூர், ஆக. 20

மராட்டியத்தின் நாக்பூர் நகரில் உள்ள நவாப்புரா பகுதியை சேர்ந்தவர் தத்தாத்ரேயா ஷெண்டே. இவருக்கு பிரணவ் மற்றும் குஷால் ஷெண்டே என 2 மகன்கள் உள்ளனர்.

இந்நிலையில், தந்தைதத்தாத்ரேயாவிடம் மகன்குஷால், கால் பாதத்தில் மசாஜ் செய்து விடும்படி கூறியிருக்கிறார். ஆனால், அவர் அதற்கு மறுப்பு தெரிவித்திருக்கிறார். இதனால் ஆத்திரமடைந்த குஷால் தந்தையை கடுமையாக தாக்க தொடங்கியிருக்கிறார்.

அவரை தடுக்க பிரணவ் முயன்றிருக்கிறார். ஆனால், பிரணவை குஷால் மிரட்டியிருக்கிறார். இதில், பயந்து போன பிரணவ், பக்கத்து வீட்டுக்காரர்களிடம் உதவி கேட்பதற்காக ஓடியிருக்கிறார். இதன்பின் மீண்டும்வீட்டுக்குதிரும்பியபோது,அவருடையதந்தைபடுகாயங்களுடன் தரையில் சுயநினைவின்றி கிடந்துள்ளார்.

உடனடியாக அவரை மேயோ மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். ஆனால், வழியிலேயே அவர் உயிரிழந்து விட்டார் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் கொலை செய்த குற்றச்சாட்டின்பேரில் குஷால் கைது செய்யப்பட்டார். அவர் இன்று வரை போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க கோர்ட்டு உத்தரவிட்டு உள்ளது. தொடர்ந்து அவரிடம் விசாரணை நடந்து வருகிறது.

## பொம்மைக்காக சண்டைபோட்ட மகள்கள்... கொடூரமாக தாக்கிய தந்தை அடுத்து நடந்த விபரீதம்

ஜாஞ்கிர்சம்பா, ஆக. 20

சத்தீஸ்கரில் பொம்மைக்காக சண்டைபோட்ட மகளை, தந்தை கொடூரமாக தாக்கியதில் அந்த சிறுமி உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜாஞ்கிர்சம்பா மாவட்டத்தைச் சேர்ந்தவர் திஷான் என்ற சல்மான். இவர் தனது மனைவியை பிரிந்து வாழ்ந்து வருகிறார். அவருடன் 6 மற்றும் 8 வயது மகள்கள் வசித்து வந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் அவரது இரண்டு மகள்களும் பொம்மைக்காக சண்டைபோட்டுள்ளனர். அப்போது ஆத்திரமடைந்த சல்மான் இருவரையும் மரக்குச்சியால் கடுமையாக தாக்கியுள்ளார். வலியில் துடித்த இரண்டு சிறுமிகளும் அழுதுகொண்டே சென்று படுத்துள்ளனர்.

பின்னர் இரவு உணவு சாப்பிடுவதற்காக அவர்கள் இருவரையும் சல்மான் எழுப்பியுள்ளார். இந்த நிலையில் அவரது மூத்த மகள் வலியில் துடித்துள்ளார். மற்றொரு மகள் எந்த அசைவுமின்றி இருந்துள்ளார்.

இதையடுத்து சல்மான் அவர்கள் இருவரையும் அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு இரண்டாவது மகள் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் அறிவித்தனர். மூத்த மகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதையடுத்துசல்மானைகைதுசெய்தபோலீசார்அவர்மீதுவழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்துப் பெற்றார் சிவ் தாஸ் மீனா



சென்னை, ஆக. 20

தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட சிவ் தாஸ் மீனா, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்துப் பெற்றார். தமிழ்நாடு ரியஸ் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவராக சிவ்தாஸ் மீனா நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராக பதவி வகித்து வந்த சிவ்தாஸ் மீனா, தமிழ்நாடு ரியஸ் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தின்தலைவராக நேற்று நியமிக்கப்பட்டார். அவருக்கு பதிலாக புதிய தலைமைச் செயலாளராக முருகானந்தம் ஐ.ஏ.எஸ். நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்ட சிவ் தாஸ் மீனா தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சென்னை தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது சிவ்தாஸ் மீனாவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்தார்.

# புதுச்சேரி மாநில மக்கள் முன்னேற்ற கழகத்தின் சேர்மன் RL வெங்கட்டராமன் பிறந்தநாள் விழா



புதுச்சேரி, ஆக. 20

புதுச்சேரி மாநில மக்கள் முன்னேற்ற கழகத்தின் சேர்மன் RL வெங்கட்டராமன் பிறந்தநாள் விழா .!!!.கழகத்தின் தலைவர் பேராசிரியர் ராமதாஸ் நேரில் சென்று வாழ்த்து தெரிவித்தார்.

புதுச்சேரி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சேர்மன் RL வெங்கட்டராமன் பிறந்தநாள் விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. கழகத்தின் மாநில செயலாளர் சிவகுமாரன் ஏற்பாட்டின் பேரில் மணக்குள விநாயகர் கோயிலில் கழகத்தலைவர் மாற்று சேர்மன் அவர்களுக்கு பரி வட்டம் கட்டி சிறப்பு பூஜை நடைப்பெற்றது. அதனை அடுத்து கழகத்தலைவர் பேராசிரியர் மு.ராமதாஸ் அனைவருக்கும் அன்னதானம் வழங்கினார். கழகத்தின் மாநில செயலாளர் சிவகுமாரன் , சேர்மன் RL வெங்கட்டராமனுக்கு ஆளுயர மாலை அணிவித்து பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார். தொடர்ந்து கழகத்தின் செயலாளர்கள் பரந்தாமன், ரவிகுமார் , மோகனசுந்தரம், உதவி செயலாளர் ஆண்டாள், SCST அணி தலைவர், மீனவர் அணி தலைவர்

சந்திரன், துணைத்தலைவர் குமார் , RLV பேரவையின் மாநில பொதுச்செயலாளர் அறம் நிஷா, மாஸ்கோ, பொருளாளர் கோமதி, மாநில செயலாளர் ராகவன், SCST அணி தலைவர் ரகோத்தமன், காமராஜ் நகர் தொகுதி ராஜாத்தி அம்மாள் ,கவிதா, அருணா , கௌரி, இளைஞரணி பொதுச்செயலாளர்பிரகாஷ உள்பட பலர்உள்ளனர்.

# நாம் தமிழர் முன்னாள் நிர்வாகி சிவராமன், மேலும் 12 மாணவிகளுக்கு பாலியல் தொல்லை தந்ததாக புகார்



கிருஷ்ணகிரி , ஆக. 20

மாணவிக்குபாலியல்தொல்லை தந்ததாக கைது செய்யப்பட்டுள்ள நாம் தமிழர் முன்னாள் நிர்வாகி சிவராமன், மேலும் 12 மாணவிகளுக்கு பாலியல் தொல்லை தந்ததாக புகார் எழுந்துள்ளது. சிவராமன் குறித்து பள்ளி நிர்வாகத்திடம் புகாரளித்தும் நடவடிக்கை இல்லை எனவும் குற்றம் சாட்டப்படுகிறது. என்.சி.சி. பிரிவே இல்லாத தனியார் பள்ளியில் சிவராமன் போலியாக என்.சி.சி. முகாம் நடத்தியது அம்பலமாகி உள்ளது.

பள்ளி ஆடிட்டோரியத்தில் மாணவிகள் தங்க வைக்கப்பட்ட நிலையில் அவர்களை தனியாக அழைத்து அத்துமீறியதாக புகார் கூறப்படுகிறது.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளை மருத்துவத்துறையில் 1474 பேருக்கு பணிநியமன ஆணை வழங்குகிறார்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்



சென்னை, ஆக. 20

அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களையும் 102 தாய்சேய் நல தொலைபேசி சேவை மூலம் கண்காணித்து மருத்துவ ரீதியாக உரிய அறிவுரைகள் வழங்குவதற்குரிய சேவையை மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னையில் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் ஷில்பா பிரபாகர் சதிஷ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை கூடுதல் இயக்குநர் சோமசுந்தரம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி கூடுதல் இயக்குநர் சாந்தாராமன் ஆகியோர் உடனிருந்தனர். பின்னர் அமைச்சர் மா. சுப்பிரமணியன் நிருபர்களிடம் கூறியதாவது:

வரும் 20ம் தேதி காலை 10 மணிக்கு சென்னை கலைவாணர் அரங்கில் தமிழ்நாடு முதல்வரால் 946 மருந்தாளுநர் பணியிடங்களுக்கான பணி ஆணைகள் வழங்கப்பட உள்ளது. அதோடுமட்டுமல்லாமல் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் மருத்துவத்துறையில் உதவியாளர் பணியிடங்களைத் தேர்ந்தெடுத்தோர் எண்ணிக்கை 523 ஆகும். அவர்களுக்கான பணி ஆணையினை முதல்வர் தர இருக்கிறார்.

அதேபோல் ஆலோசகர் என்று சொல்லக்கூடிய பொறுப்புகளுக்கு 5 என ஆக மொத்தம் 1474 பணியாளர்களுக்கு முதல்வர் பணி ஆணையினை தர இருக்கிறார்.

கல்லூரி முதல்வர்கள் பணி மூப்பு அடைந்து பணியில் இருந்து செல்லும்போது அவர் இடத்திற்கு இன்னொருவர் நியமிக்கப்பட வேண்டும். ஒருவர் கல்லூரியில் இருந்து பணி ஓய்வு பெறும்போது அதே நாளில் அக்கல்லூரியில் உள்ளமூத்தபேராசிரியர்பொறுப்பு பணி எடுத்துக் கொள்வார்கள். காலியிடம் என்பதே கிடையாது. கல்லூரி முதல்வர் என்னென்ன பணியினை செய்தாரோ அதேப் பணியினைபொறுப்புமுதல்வரும் செய்வார்கள். 13 மருத்துவக் கல்லூரிகளில் கல்லூரி முதல்வர்களே இல்லை என்பது போலவும், மருத்துவப் பணிகள் முடங்கி கிடப்பது போன்றும் தோற்றத்தை உருவாக்குவது சரியல்ல. இவ்வாறு அவர் கூறினார்.

# ரேலா மருத்துவமனை சார்பில் பெண்கள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு சைக்கிளத்தான்: 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

தாம்பரம், ஆக. 20

குரோம்பேட்டை ரேலா மருத்துவமனை, சென்னை சைக்ளிஸ்ட்ஸ் அமைப்பு சார்பில், பெண்கள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு சைக்கிளத்தான் நிகழ்ச்சி நேற்று நடந்தது. 125 கி.மீ. தூரத்திற்கான 'ப்ரீடம் 125' மற்றும் 40 கி.மீ. தூரத்திற்கான 'விடுதலை 40' சைக்கிளத்தான் என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்சியில், 16 வயது முதல் 70 வயதுடைய 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.




ரேலா மருத்துவமனை நுழைவாயிலில் இருந்து, அதிகாலை 5.30 மணிக்கு இந்த சைக்ளத்தான் தொடங்கியது. ரேலா மருத்துவமனை தலைமை செயல் அலுவலர் இளங்குமரன் கலியமூர்த்தி, சர்வதேச சைக்ளிஸ்ட்ஸ் எம்.ஆர்.சவுந்தரராஜன், மைண்ட் அண்ட் மாம் தலைமை செயல் அலுவலரும், இணை நிறுவனருமான பத்மினி ஜானகி, ரேலா மருத்துவமனை இன்டர்வென்ஷனல் ரேடியாலஜி பிரிவு தலைவர் தீபஸ்ரீ ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

இந்த சைக்ளத்தான், ஜிஎஸ்டி சாலை வழியாக திருப்போரூர், செங்கல்பட்டு, பாலூர், ஒரகடம், படப்பை, முடிச்சூர் வழியாக, மீண்டும் ரேலா மருத்துவனை வளாகத்தில் நிறைவு பெற்றது. பணத்தை நிறைவு செய்தவர்களுக்கு பதக்கம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் ரேலா மருத்துவமனை தலைமை செயல் அலுவலர் இளங்குமரன் கலியமூர்த்தி பேசுகையில், ''நமது நாட்டின் சில பகுதிகளில் பெண்களுக்கு எதிரான கண்டிக்கத்தக்க வன்முறை செல்களால் பெண்களின் பாதுகாப்பு என்ற கருப்பொருளாகத் தேர்ந்தெடுத்தோம்.

வீட்டிலும், பணியாற்றும் இடத்திலும், சாலைகளிலும் மற்றும் சமுதாயம் முழுவதிலும் பெண்கள் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டிய அவசியத்தை இந்த சம்பவம் ஏற்படுத்தி உள்ளது.

பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், நமது நாட்டின் வளர்ச்சி மற்றும் செழுமைக்கு பெண்கள் முழுமையாக பங்களிக்க வழி வகுக்கிறோம்,'' என்றார்.

# கையை அறுத்துக்கொண்டு பெண் காவலர் தற்கொலை முயற்சி

சென்னை, ஆக. 20

மயிலாப்பூர் காவல் மாவட்ட துணை கமிஷனர் அரி கிரண் பிரசாத் தலைமையில், கடந்த வாரம் நீதிமன்ற பணிகளை மேற்கொள்ளும் காவலர்களுக்கான ஆலோசனை கூட்டம், அபிராமபுரம் காவல் நிலைய வளாகத்தில் நடந்தது. இதில், ராயப்பேட்டை, மயிலாப்பூர், ஐஸ்அவுஸ், அபிராமபுரம், மெரினா, பட்டினப்பாக்கம், ஜாம்பஜார், கோட்டூர்புரம் காவல் நிலையத்தில் பணியாற்றும் நீதிமன்ற பணிகளை கவனிக்கும் காவலர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது, நீதிமன்ற பணிகளில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தி, நீதிமன்ற பணிகளை பராமரிக்கும் நோட்டு புத்தகத்தை துணை கமிஷனர் சரிபார்த்துள்ளார்.

அதில், ராயப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர் லாவண்யா, நீதிமன்ற பணிகளுக்கான நோட்டு புத்தகத்தை பராமரிக்காமல், டைரியில் நீதிமன்ற பணிகள் குறித்து வைத்திருந்தது தெரியவந்தது. இதுகுறித்து 5 நாட்களில் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும்,

தவறினால் துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் துணை கமிஷனர் எச்சரிக்கை விடுத்ததாக கூறப்படுகிறது.

இதனால் மனமுடைந்த தலைமை காலவர் லாவண்யா, நேற்று முன்தினம் இரவு மயிலாப்பூர் துணை கமிஷனர் அலுவலக எழுத்தரை செல்போனில் தொடர்பு கொண்டு, நான் தற்கொலை செய்து கொள்ள போகிறேன், என்று கூறி இணைப்பை துண்டித்துள்ளார். அதிர்ச்சியடைந்த அவர், ராயப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் லாவண்யாவுடன் பணியாற்றும் சக பெண் காவலர்களிடம் நேரில் சென்று பார்க்கும்படி கூறியுள்ளார்.

அதன்படி சக போலீசார் வந்து பார்த்த போது, லாவண்யா தனது கையை அறுத்து கொண்டு தற்கொலைக்கு முயன்றது தெரியவந்தது. உடனே, அவரை மீட்டு ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.

# சென்னை பெரியமேடு கால்நடை மருத்துவமனை அருகே ரூ.4 லட்சம் மதிப்பு கஞ்சா பறிமுதல்



சென்னை, ஆக. 20

சென்னை பெரியமேடு கால்நடை மருத்துவமனை அருகே நேற்று முன்தினம், பெரியமேடு போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்ட போது, கையில் பையுடன் சந்தேகத்திற்கு இடமான வகையில் சுற்றித் திரிந்த 2 பேரை பிடித்து விசாரணை நடத்தினர்.

அவர்கள் முன்னுக்கு பின் முரணமாக பதில் அளித்ததால், அவர்கள் வைத்திருந்த பையை சோதனை செய்தனர்.

அதில், ரூ.4 லட்சம் மதிப்புள்ள 150 கிராம் உயர் ரக கஞ்சா வைத்திருந்தது தெரியவந்தது. விசாரணையில், சிதம்பரம் பகுதியை சேர்ந்த நூரூல் ஹாலிப் (34) மற்றும் இம்தியாஸ் அகமது (32) எனவும், இவர்கள் வெளிநாடுகளில் இருந்து கடத்தி வரப்பட்ட உயர் ரக கஞ்சாவை, மேற்கண்ட பகுதியில் விற்பனை செய்ய வைத்திருந்தது தெரியவந்தது. அவர்களை கைது செய்து, அவர்களிடம் இருந்து ரூ.4 லட்சம் மதிப்புள்ள 150 கிராம் உயர் ரக கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

# கவுன்சிலர்கள் தவறு செய்தால் புகார் தெரிவிக்கலாம்: பெரம்பூர் எம்எல்ஏ பேச்சு



பெரம்பூர், ஆக 20

கவுன்சிலர்கள் தவறு செய்தால் புகார் தெரிவிக்கலாம் என்று வியாசர்பாடியில் நடந்த நிகழ்ச்சியில் பெரம்பூர் எம்எல்ஏ ஆர்.டி.சேகர் பேசியுள்ளார். வடசென்னை குடியிருப்போர் நல சங்கங்களின் கூட்டமைப்பு தொடக்க விழா வியாசர்பாடியில் உள்ள தனியார் மண்டபத்தில் நேற்று காலை நடைபெற்றது. வடசென்னையில் உள்ள பல்வேறு குடியிருப்போர் நல சங்கங்கள் ஒருங்கிணைந்துஇந்தநிகழ்ச்சியை நடத்தியது. இதில் வடசென்னை குடியிருப்போர் சங்க கூட்டமைப்பு பொறுப்பாளர் சண்முகம், ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன், வழக்கறிஞர் அஜய்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


இதில் வடசென்னை பகுதியில் சுற்றுச்சூழல், மாசுகட்டுப்பாடு, மின்சார கட்டமைப்பு, குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல், குடிநீர் இணைப்புகள் முறைப்படுத்துதல், ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் தாய் சேய் நல மையங்கள் கொண்டு வருதல், மலேரியா ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு முறைகள், தெருநாய்களை கட்டுப்படுத்துதல், திடக்கழிவு மேலாண்மை, போக்குவரத்து நெரிசல், நீர்வழி மேலாண்மை, சாலைகள் மேம்பாலங்கள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை மேம்படுத்துதல் சம்பந்தமாக விவாதிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பெரம்பூர் எம்எல்ஏவும், வடசென்னை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளருமான ஆர்.டி.சேகர் கலந்துகொண்டு பேசுகையில், வடசென்னை வளர்ச்சி பணிக்கு ஆயிரம் கோடிகள் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. நிதி நெருக்கடியில் இருந்தபோதும் அரசு பல்வேறு திட்டப் பணிகளை தொடர்ந்து செய்து வருகிறது. ஒன்றிய அரசு தொடர்ந்து நிதி அளிப்பதில் பாரபட்சம் காட்டுகிறது.

இதனால் மழை வெள்ள பாதிப்புகளுக்குக்கூட நிதி வழங்காமல் ஒன்றிய அரசு தொடர்ந்து வஞ்சித்து வருகிறது.

வட சென்னையில் தற்போது கணேசபுரம், கொருக்குப்பேட்டை உள்ளிட்ட இடங்களில் மேம்பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மக்களின் நீண்ட கால பிரச்னைக்கு திமுக அரசு தீர்வு கண்டுள்ளது. மேலும் முதல்வர் கூறியபடி, உங்களது பகுதியில் யாரேனும் கவுன்சிலர்கள் வீடு கட்டும்போது அல்லது வேறு ஏதாவது பிரச்னைகளில் உங்களிடம் முறைகேடாக நடந்து கொண்டால் அவர்கள் குறித்து நீங்கள் புகார் அளிக்கலாம். அந்த புகார் தலைமைக்கு கொண்டு செல்லப்பட்டு கண்டிப்பாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

# நுங்கம்பாக்கத்தில் உள்ள பிரபல நட்சத்திர ஓட்டல் பாரில் தோழிகளுடன் நடனமாடிய மாணவன் சுருண்டு விழுந்து பலி: போலீசார் விசாரணை



சென்னை, ஆக. 20

நுங்கம்பாக்கத்தில் உள்ள பிரபல ஓட்டலின் பாரில் தனது தோழிகளுடன் மது போதையில் இசைக்கு ஏற்றப்படி குத்தாட்டம் போட்ட கல்லூரி மாணவன், சுருண்டு விழுந்து உயிரிழந்தார். இது தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். சிவகங்கை மாவட்டம், காரைக்குடியை சேர்ந்தவர் முகமது சுகைல் (22). இவர், ராமாபுரம் பகுதியில் உள்ள பிரபல தனியார் பல்கலைக்கழகத்தில் எம்பிஏ முதலாமாண்டு படித்து வந்தார். பல்கலைக்கழக மாணவர் விடுதியில் தங்கி, படித்து வந்தார். வசதியான குடும்பத்தை சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது.

இதனால், வார இறுதி நாட்களில் தன்னுடன் படிக்கும் தோழிகளுடன், நட்சத்திர ஓட்டலில் உள்ள பார்களுக்கு செல்வது வழக்கம் என்றும் கூறப்படுகிறது. அதன்படி நேற்று முன்தினம் இரவு முகமது சுகைல், தனது தோழிகளான சண்முகப்பிரியா, தேவகி, அரிதா ஆகியோருடன் நுங்கம்பாக்கத்தில் உள்ள பிரபல நட்சத்திர ஓட்டலில் உள்ள பாருக்கு சென்றுள்ளார். அங்கு, தனது தோழிகளுடன் மது போதையில், இசைக்கு ஏற்றப்படி நடனமாடியும், கூத்தாட்டம் போட்டபோது திடீரென முகமது சுகைல் சுருண்டு விழுந்துள்ளார்.

இதை பார்த்த அவரது தோழிகள் அலறினர். உடனே, பார் ஊழியர்கள், அவரை மீட்டு 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு டாக்டர்கள் பரிசோதனையில், முகமது சுகைல் வரும் வழியிலேயே இறந்தது தெரிந்தது. தகவலறிந்த தேனாம்பேட்டை போலீசார், சம்பவ இடத்திற்கு வந்து, உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பினர். மேலும் இது குறித்து வழக்கு பதிவு செய்து, முகமது சுகைல் உடன் வந்த தோழிகள் 3 பேரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில், அளவுக்கு அதிக மாக மது அருந்திவிட்டு, நீண்ட நேரம் நடனமாடியதால் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது தெரியவந்தது. பிரேத பரிசோதனைக்கு பிறகுதான் முகமது சுகைல் இறப்புக்கான முழுமையான காரணம் தெரியவரும் என போலீசார் தெரிவித்துள்ளனர். பிரபல தனியார் பல்கலைக்கழக மாணவன், சக தோழிகளுடன் பாரில் நடனமாடும் போது உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பராமரிப்பு பணிகள் நிறைவு பெற்றதால் கடற்கரைதாம்பரம் இடையே ரயில் போக்குவரத்து சீரானது: தெற்கு ரயில்வே அறிவிப்பு

சென்னை, ஆக. 20

பராமரிப்பு பணிகள் நிறைவு பெற்றதால், கடற்கரைதாம்பரம் இடையே ரயில்கள் வழக்கம் போல் இயங்கும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. சென்னை கடற்கரையில் இருந்து – தாம்பரம் – செங்கல்பட்டு வழித்தடத்தில் தினசரி ஏராளமான மின்சார ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் தினமும் பல்லாயிரக்கணக்கானோர் பயணம் செய்கின்றனர். இதே போல், தென் மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு இயக்கப்படும் கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ், நெல்லை எக்ஸ்பிரஸ், முத்துநகர் எக்ஸ்பிரஸ், பொதிகை எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட ரயில்கள் அனைத்தும் தாம்பரம் வழியாக எழும்பூர் வரை இயக்கப்படுகின்றன.

இதனால் தாம்பரம் ரயில் நிலையம் என்பது முக்கிய முனையமாக உள்ளது. பயணிகளின் பாதுகாப்பு மற்றும் ரயில் சேவையை மேம்படுத்தும் வகையில் தெற்கு ரயில்வே பல்வேறு நடவடிக்கைகளை செய்து வருகிறது. அந்த வகையில், தாம்பரம் பணிமனையில் சிக்னல் மேம்படுத்துதல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. அதன்படி, தாம்பரம் பணிமனையில் கடந்த மாதம் 23ம் தேதி பராமரிப்பு பணி தொடங்கியது.

இதன் காரணமாக, சென்னை தாம்பரம் வழியாக வரும் ரயில்களில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. சென்னை கடற்கரை – தாம்பரம் – செங்கல்பட்டு வழித்தடத்தில் இயக்கப்படும் மின்சார ரயில் சேவைகளில் பல்வேறு மாற்றங்களை தெற்கு ரயில்வே செய்தது. இதனால், பயணிகள் சிரமப்பட்டனர். இந்த நிலையில் தாம்பரத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த பராமரிப்பு பணிகள் நேற்றுடன் முடிவடைந்தது. இதனால் இன்று முதல் சென்னை கடற்கரை – தாம்பரம் – செங்கல்பட்டு வழித்தடத்தில் மின்சார ரயில் சேவை வழக்கம் போல் இயக்கப்பட உள்ளது.

இதுகுறித்து தெற்கு ரயில்வே அதிகாரிகள் கூறுகையில், ''தாம்பரம் ரயில் நிலையத்தில் யார்டு பராமரிப்பு பணிகள் முதலில் கடந்த 14ம் தேதி வரை மட்டுமே நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் அதற்கு தகுந்த மாதிரி மின்சார ரயில்கள் ரத்து செய்யப்பட்டிருந்தன. ஆனால் பராமரிப்பு பணியை முழுவதுமாக முடிக்க கூடுதல் கால அவகாசம் தேவைப்பட்டது. இதன் காரணமாக கூடுதாக மேலும் 4 நாட்களுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள கடந்த 15ம் தேதி முதல் 18ம் தேதி வரை மின்சார ரயில் ரத்து நீட்டிக்கப்பட்டது.

இதன்படி, சென்னை கடற்கரை ரயில் நிலையத்தில் இருந்து தாம்பரத்திற்கு இயக்கப்படும் 59 மின்சார ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டு பல்லாவரம் வரை மட்டுமே இயக்கப்பட்டு வந்தது. இதேபோன்று, பயணிகளின் வசதிக்காக குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் தாம்பரத்திற்கு மின்சார ரயில்கள் இயக்கப்பட்டன. நேற்றுடன் தாம்பரம் யார்டு பணிகள் நிறைவடைந்தது. இதனால் இன்று முதல் சென்னை கடற்கரை – தாம்பரம் – செங்கல்பட்டு வழித்தடத்தில் வழக்கம் போல் இயங்கும் மின்சார ரயில் சேவைகள் இயங்கும்.

இதன்மூலம், தாம்பரம் ரயில் நிலையத்தில் ரயில் போக்குவரத்து சீரானது. தாம்பரம் ரயில் நிலைய மறு சீரமைப்பு பணிகள் கடந்த சில நாட்களாக நடந்து வந்த நிலையில் தற்போது அந்த பணி நிறைவடைந்து மின்சார ரயில் போக்குவரத்து மீண்டும் தொடங்கியுள்ளது. தாம்பரத்தில் எக்ஸ்பிரஸ் ரயில்கள் வழக்கம் போல நின்று செல்லும், அனைத்து ரயில்களும் வழக்கமான கால அட்டவணைப்படி இயக்கப்பட உள்ளது,'' என்றார்.

# பொது சிவில் சட்டத்தை நடைமுறைப்படுத்த கூடாது: மமக மாநில செயற்குழு தீர்மானம்



திருச்சி, ஆக. 20

பொது சிவில் சட்டத்தை நடைமுறைப்படுத்த கூடாது என மமக இளைஞரணி மாநில செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மனிதநேய மக்கள் கட்சி இளைஞர் அணி மாநில செயற்குழு கூட்டம் திருச்சி பீமநகரில் நேற்று நடைபெற்றது. இளைஞர் அணி மாநில செயலாளர் தாம்பரம் அன்சாரி தலைமை தாங்கினார். கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா எம்எல்ஏ சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில், பீகாரில் சாதிவாரி கணக்கெடுப்பு நடைபெற்றதை போன்று, தமிழ்நாட்டிலும் சாதிவாரி கணக்கெடுப்பு உடனடியாக நடத்தி அனைத்து மக்களுக்கான கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு முறையாக வழங்க வேண்டும். பாலஸ்தீன் காசாவில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு ராணுவத்தின் அத்துமீறலால் இதுவரை 40,000க்கும் அதிகமானோர் பலியாகி உள்ளனர்.

இஸ்ரேலோடு வர்த்தக ரீதியான தொடர்பு என்ற பெயரில் ஆயுதங்கள் இந்தியாவிலிருந்து அனுப்பப்படுகிறது.

அதனை உடனடியாக ஒன்றிய அரசு தடுத்து நிறுத்த வேண்டும். தமிழகத்தில் சில பகுதிகளில் என்ஐஏ தொடர்ந்து அப்பாவி இஸ்லாமிய இளைஞர்களை குறிவைத்து விசாரனை என்ற பெயரில் அத்துமீறி வருகிறது. இதை உடனடியாக நிறுத்த வேண்டும். சிறுபான்மையினரின் நம்பிக்கையை குலைக்கும் வகையில் கொண்டு வரப்படும் பொது சிவில் சட்டத்தை நடைமுறைப்படுத்த கூடாது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

# யானை வழித்தடத்தில் கட்டப்பட்ட 35 தனியார் காட்டேஜ்களை இடித்து அகற்ற நோட்டீஸ்: மாவட்ட நிர்வாகம் அதிரடி

ஊட்டி, ஆக. 20

முதுமலை புலிகள் காப்பகம், மசினகுடி பகுதியில் யானை வழித்தடத்தில் கட்டப்பட்டுள்ள 35 தனியார் காட்டேஜ்களை 15 நாட்களுக்குள் இடித்து அகற்றுமாறு உரிமையாளர்களுக்கு மாவட்ட நிர்வாகம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது. நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகே மாயார் பள்ளத்தாக்கு, சீகூர் பள்ளத்தாக்கு, சோலூர், முதுமலை, பொக்காபுரம், மாவனல்லா, வாழைத்தோட்டம் உள்ளிட்ட யானைகள் வழித்தட பகுதிகளில் அமைக்கப்பட்ட 309 அறைகள் கொண்ட 39 கட்டிடங்களுக்கு உயர்நீதி மன்ற உத்தரவின்படி மாவட்ட நிர்வாகம் சீல் வைத்தது.

இதையடுத்து 1410 2020ல் சீகூர் யானைகள் வழித்தடம் தொடர்பாக ஆராய ஓய்வுபெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கே.வெங்கடராமன் தலைமையில் பிரவீன் பார்கவா, நந்தித்தா ஹாசரிக்கா 3 நபர் விசாரணைக் குழு அமைத்து உச்சநீதி மன்றம் உத்தரவிட்டது. இக்குழுவிடம் 2020 டிசம்பர் முதல் 2021 பிப்ரவரி 14 வரை ரிசார்ட் உரிமையாளர்கள், விவசாயிகள், நில உரிமையாளர்கள் என பலர் ஆட்சேபனை தெரிவித்து மனு அளித்தனர். குழுவின் விசாரணை முடிந்த நிலையில் தனியார் காட்டேஜ்கள் குடியிருப்புக்கான உரிமம் பெற்று கட்டப்பட்டு வணிக ரீதியாக பயன்படுத்தி வருவது உறுதி செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து அவற்றை இடிக்க கடந்த ஆண்டு உத்தரவிட்டது.

இக்குழுவின் உத்தரவுப்படி தற்போது நீலகிரி மாவட்ட நிர்வாகம் மசினகுடி ஊராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள 11 காட்டேஜ் கட்டிடங்கள், சோலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 20 காட்டேஜ்கள் ஏற்கனவே சீல் வைக்கப்பட்டுள்ள 35 காட்டேஜ்களை அவற்றின் உரிமையாளர்களே 15 நாட்களுக்குள் இடித்து அகற்றுமாறு உத்தரவிட்டு பதிவு தபால் மூலம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது. நோட்டீஸ் கிடைக்கப்பெற்ற நாளில் இருந்து 15 நாட்களுக்குள் இடித்து அகற்றாத பட்சத்தில் மாவட்ட நிர்வாகமே இடித்து அகற்றும். அதற்கான செலவு தொகை உரிமையாளரிடம் இருந்து வசூலிக்கப்படும் எனவும் நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மதுரை மாநகராட்சியில் ரூ.1.50 கோடி வரிமோசடி: பில் கலெக்டர்கள் 5 பேர் சஸ்பெண்ட்




மதுரை, ஆக. 20

மதுரை மாநகராட்சியில் ரூ.1.50 கோடி வரிமோசடி செய்ததாக புகாரின் பேரில் பில் கலெக்டர்கள் 5 பேரை கமிஷனர் தினேஷ்குமார் சஸ்பெண்ட் செய்துள்ளார். மதுரை மாநகராட்சியில் சொத்து வரி மூலம் சுமார் ரூ.97 கோடி வருவாய் கிடைத்து வருகிறது. மாநகராட்சியால் நியமிக்கப்பட்ட பில் கலெக்டர்கள் வரிவசூல் செய்யும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்காக அந்தந்த பகுதி கணினி வசூல் மையங்களுக்கு ஏற்ப பில் கலெக்டர்களுக்கு தனித்தனியாக மாநகராட்சி நிர்வாகம் ஐடி மற்றும் பாஸ்வேர்டு வழங்கியுள்ளது.

கிழக்கு, வடக்கு, மத்தி, தெற்கு மற்றும் மேற்கு ஆகிய 5 மண்டலங்களில் வரி வசூலில் முறைகேடுகள் நடந்திருப்பதாகவும், இதன்மூலம் மாநகராட்சிக்கு ரூ.1.50 கோடிக்கு வரி இழப்பீடு ஏற்பட்டுள்ளதாகவும் கமிஷனர் தினேஷ்குமாருக்கு புகார் சென்றது.

அதன் அடிப்படையில் சிறப்பு அதிகாரிகள் குழுவை கமிஷனர் நியமித்து ஆய்வுக்குட்படுத்தி விசாரணை நடந்தது. மதுரை மாநகராட்சியில் உள்ள 5 மண்டலங்களில் பணிபுரியும் பில் கலெக்டர்களில் 5 பேர் பாஸ்வேர்டை முறைகேடாக பயன்படுத்தி கூடுதலாக வரி வசூலிக்க வேண்டிய கட்டிடங்களின் வரியை குறைத்திருக்கின்றனர்.

இவ்வாறு பில் கலெக்டர்கள் மாநகராட்சியால் விதிக்கப்பட்ட வரியை சுமார் ரூ.1.50 கோடி வரை முறைகேடாக குறைத்து காட்டியுள்ளனர். வரி ஏய்ப்பு நடந்திருப்பதை சிறப்பு அதிகாரிகள் குழுவினர் கண்டுபிடித்து கமிஷனர் தினேஷ்குமாருக்கு அறிக்கையாக சமர்ப்பித்தனர். அதனடிப்படையில் பில் கலெக்டர்கள் 5 பேரை சஸ்பெண்ட் செய்து கமிஷனர் தினேஷ்குமார் உத்தரவிட்டுள்ளார். முறைகேட்டில் அந்த கட்டிட உரிமையாளர்களுக்கு பங்கு இருக்குமா என்ற கோணத்திலும் விசாரணை நடந்து வருகிறது. மேலும் 17 பில் கலெக்டர்களையும் விசாரணைக்கு உட்படுத்த உள்ளதாக மாநகராட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# குளத்தில் மூழ்கிய 9 வயது மகளும் காப்பாற்ற முயன்ற தாயும் உயிரிழப்பு

நெல்லை, ஆக. 20

நெல்லை மாவட்டம் முக்கூடல் அருகே கீழப்பாப்பாக்குடியைச் சேர்ந்தவர் தங்கராஜ். கூலித் தொழிலாளி. இவரது மனைவி சாந்தி (28). இவர்களது மகள் இசக்கியம்மாள் (9). 4ம் வகுப்பு படித்து வந்தார். அங்குள்ள நீர்மேலழகியான் குளம் அண்மையில் பெய்த மழையால் நிரம்பியுள்ளது. பல இடங்களில் மண் எடுத்து பள்ளமாக இருந்தது. இந்நிலையில் நேற்று காலை குளத்துக்கு சென்று சாந்தி துணிகளை துவைக்க, குளித்து கொண்டிருந்த இசக்கியம்மாள் ஆழமான இடத்தில் சிக்கி தத்தளித்தார். உடனே சாந்தி மகளை காப்பாற்ற குதித்துள்ளார். ஆனால் இருவரும் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். இதுகுறித்து பாப்பாக்குடி போலீசார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தஞ்சையில் கூட்டு பலாத்காரத்தால் பாதிக்கப்பட்ட பெண்ணிடம் புகாரை வாங்க மறுத்த பெண் எஸ்ஐ இடமாற்றம்

ஒரத்தநாடு, ஆக. 20

கூட்டு பாலியல் பலாத்காரத்தால் பாதிக்கப்பட்ட பெண்ணிடம் புகாரை வாங்க மறுத்த பெண் எஸ்ஐயை ஆயுதப்படைக்கு மாற்றி தஞ்சாவூர் எஸ்பி உத்தரவிட்டுள்ளார். தஞ்சாவூர் மாவட்டம், பாப்பாநாடை சேர்ந்தவர் 22வயதானபி.எஸ்.சி., பட்டதாரி பெண். சென்னையில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வரும் இவர், விடுமுறையில்கடந்த12ம்தேதி ஊருக்கு வந்துள்ளார். தனியாக வீட்டில் இருந்த அவரை அதேபகுதியை சேர்ந்த கவிதாசன்(25), நண்பர்கள் திவாகர்(27), பிரவீன்(20), மற்றும் 17 வயது சிறுவன் என 4 பேரும் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர்.

இதுதொடர்பாக பாதிக்கப்பட்ட பெண், பாப்பாநாடு காவல் நிலைய பெண் எஸ்ஐ சூர்யாவிடம் புகார் கொடுத்துள்ளார். ஆனால் அவர் புகாரை வாங்க மறுத்துள்ளார். பின்னர்பாதிக்கப்பட்ட பெண், ஒரத்தநாடு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அதன்பேரில் இன்ஸ்பெக்டர் சுதா, 7 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிந்து கவிதாசன் உட்பட 4 பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தார்.

இந்நிலையில் பாப்பாநாடு பெண் எஸ்ஐ சூர்யா, பாதிக்கப்பட்ட பெண்ணிடம் புகாரை வாங்க மறுத்த தகவல் தெரிய வந்ததால் அவரை ஆயுதபடைக்கு மாற்றி எஸ்.பி ஆசிஷ்ராவத்நேற்றுஉத்தரவிட்டார்.

## தடை செய்யப்பட்ட வனத்துக்குள் நுழைந்த மாணவர்களுக்கு ரூ.14,000 அபராதம் விதிப்பு



கொடைக்கானல், ஆக.20

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் நகருக்கு மிக அருகே உள்ள கரடிச்சோலை வனப்பகுதி மற்றும் அங்குள்ள அருவிக்கு சுற்றுலாப் பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், திண்டுக்கல்லில் உள்ள தனியார்கல்லூரி மாணவர்கள் 14 பேர் நேற்று முன்தினம் கொடைக்கானலுக்கு சுற்றுலா வந்தனர்.

இவர்கள்தடை செய்யப்பட்ட கரடிச்சோலை வனப்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்ததுடன், புகைப்படமும் எடுத்துள்ளனர். இதுகுறித்து தகவலறிந்து வனத்துறையினர் கரடிச்சோலை வந்தனர். அங்கு தடையை மீறி சுற்றித்திரிந்த கல்லூரி மாணவர்கள் 14 பேரையும் பிடித்து தலா ரூ.1000 விதம் ரூ.14,000 அபராதம் விதித்தனர்.

## வெளிநாட்டில் இருந்து தமிழகம் வருபவர்களுக்கு குரங்கம்மை பாதிப்பு உள்ளதா என தீவிரமாக கண்காணிக்கப்படும்: அமைச்சர் தகவல்



சென்னை, ஆக. 20

சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் ரோட்டரி கிளப் சார்பில், 10 ஆயிரம் பயனாளிகள் பயனடையும் வகையில் செயற்கை சிறுநீரக சுத்திகரிப்பு மருத்துவ உபகரணங்களை அர்ப்பணிக்கும் விழா நேற்று நடந்தது. இதில், அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு, உபகரணங்களை மருத்துவர்களிடம் ஒப்படைத்தார். பின்னர் அவர்பேசியதாவது: தமிழ்நாடு முழுவதும் மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் மூலம் 15 லட்சத்து 70 ஆயிரத்து 322 சர்க்கரை நோயாளிகள் பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள சென்னை, கோவை, மதுரை, திருச்சி உள்ளிட்ட சர்வதேச விமான நிலையங்களில் வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கு குரங்கம்மை இருக்கிறதா என்பது குறித்து ஆய்வு செய்கிறார்கள். யாருக்காவது அந்த பாதிப்பு இருந்தால் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்படுவார்கள். நாளை நான் நேரடியாக விமான நிலையத்தில் ஆய்வு செய்ய உள்ளேன். இவ்வாறு பேசினார். விழாவில் ரோட்டரி சங்க நிர்வாகிகள் குமரவேல், சீதாராமன், மண்டலக் குழு தலைவர் கிருஷ்ணமூர்த்தி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## மின்வாரிய கேங்மேன் தொழிலாளர்களை சொந்த மாவட்டத்தில் பணியாற்ற அனுமதிக்க வேண்டும்: பிரேமலதா கோரிக்கை



சென்னை, ஆக. 20

தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா வெயிட்ட அறிக்கை: தமிழ்நாடு மின்வாரியத்தில் 2021ம் ஆண்டு ஒப்பந்த பணியாளர்கள் மற்றும் சில தொழிலாளர்கள் தகுதித் தேர்வு வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்டு 9,613 நபர்கள் கேங்மேன் தொழிலாளர்களாக பணி அமர்த்தப்பட்டனர். இப்படி தேர்வு செய்யப்பட்ட தொழிலாளர்களை அந்தந்த மாவட்டத்தில் நியமனம் செய்யாமல் 300 கிமீ தொலைவுக்கு அப்பால் உள்ள மாவட்டங்களில் பணி அமர்த்தினார்கள்.

இதனால் கேங்மேன் தொழிலாளர்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். எனவே கேங்மேன் தொழிலாளர்களை கள உதவியாளராக அறிவித்து அவர்களுக்குரிய பணியை செய்ய அரசு வழிவகை செய்ய வேண்டும். மேலும் கேங்மேன் தொழிலாளர்களை அவரவர் சொந்த மாவட்டத்தில் பணிபுரிவதற்கான அரசாணையையும் உடனே வெளியிட வேண்டும்.

## தொழில்நுட்ப கோளாறு காரணமாக மெட்ரோ ரயில் சேவை பாதிப்பு



சென்னை, ஆக. 20

தொழில்நுட்பகோளாறு காரணமாக நேற்று மெட்ரோ ரயில் சேவை பாதிக்கப்பட்டது. சென்னையில் விம்கோ நகர் – விமானநிலையம், சென்ட்ரல் – பரங்கிமலை ஆகிய 2 வழித்தடங்களில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த வழித்தடங்களில் உள்ள மெட்ரோ ரயில் நிலையங்களில் காலை, மாலை நேரத்தில் பயணிகள் கூட்டம் அலைமோதுவது வழக்கம். இதன் காரணமாக, இந்த நேரங்களில் 3 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்நிலையில், விம்கோநகர் – விமான நிலைய வழித்தடத்தில் நேற்று மதியம் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது.

இதனால், விம்கோ நகர் – விமான நிலையம், சென்ட்ரல் – பரங்கிமலை ஆகிய இரு வழித்தடங்களிலும் மெட்ரோ ரயில்கள் ஆங்காங்கே தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. உடனடியாக, மெட்ரோ ரயில் பொறியாளர்கள் விரைந்து வந்து, தொழில்நுட்ப கோளாறை சரி செய்தனர். இதையடுத்து, 40 நிமிடங்களுக்குபிறகுரயில்சேவை மீண்டும் தொடங்கியது. இதனால், பயணிகள் அவதிக்குள்ளாகினர்.

## சாலையோர வியாபாரிகளுக்கான 3 நாட்கள் சிறப்பு முகாம்: மாநகராட்சி அறிவிப்பு




சென்னை, ஆக. 20

சாலையோர வியாபாரிகளுக்கான அடையாளஅட்டைதிருத்தம் செய்ய 3 நாட்களுக்கு சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது என சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது. இதுதொடர்பாக வெளியிட்ட அறிவிப்பில்: சென்னை மாநகராட்சியில் கடந்த 2023ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி சாலையோர வியாபாரிகளுக்கான ஏற்கனவே வழங்கப்பட்ட அடையாள அட்டையில் உள்ள விவரங்களில் ஏதேனும் திருத்தம் தேவைப்படுவோர், வழங்கப்பட்ட அடையாள அட்டையை நகல் எடுத்து அதில் எந்த திருத்தம் தேவைப்படுகிறது என குறிப்பிட்டு அதற்கான ஆதாரத்துடன் கையொப்பமிட்டு, இன்று முதல் 21ம் தேதி வரை நடைபெறவுள்ள சிறப்பு முகாமில் சம்மந்தப்பட்ட வட்டார அலுவலகத்தில் உள்ளமுதுநிலைவருவாய் அலுவலர்களிடம் வழங்கலாம்.

## ஜெயின் கோயிலில் 25 கிலோ வெள்ளி பொருள் கொள்ளை



சேலம், ஆக. 20

சேலம் செவ்வாய்பேட்டை ருத்ரப்பன் தெருவில் உள்ள ஜெயின் கோயிலுக்கு நேற்று காலை பெண்கள் சிலர் வழிபட சென்றனர். அப்போது, கோயிலின் கதவு உடைக்கப்பட்டிருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தனர். தகவலறிந்து செவ்வாய்பேட்டை போலீசார் வந்து விசாரணை நடத்தினர். இதில், கோயிலில் வைக்கப்பட்டிருந்த சாமிக்கு அணிவிக்கப்படும் தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளி கிரீடம், வெள்ளி அங்கி,

தட்டு உள்பட 25 கிலோ வெள்ளி பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. உண்டியல் உடைக்கப்பட்டு, சுமார் ரூ.10 ஆயிரம் கொள்ளை போயிருந்தது. சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்ததில் முகமூடி அணிந்த நபர் தனியாக வந்து கொள்ளையடித்தது தெரியவந்தது. அவரை பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.

## போலி அமெரிக்க டாலர் வழங்கிய நைஜீரியர் கைது



ஈரோடு, ஆக. 20

போலிஅமெரிக்கடாலர் வழங்கிய நைஜீரியர் கைது செய்யப்பட்டார். ஈரோடு மாவட்டம், கொளத்துப்பாளையம் அருகே தேவம்பாளையத்தை சேர்ந்த அசோக்குமார் (36).

இவர் ஈரோட்டில் டிராவல்ஸ் ஏஜென்சி நடத்தி வந்தார். 3 மாதங்களுக்கு முன்பு டிராவல்ஸ் ஏஜென்சியை மூடிவிட்டு, வேறொரு நிறுவனத்தில் மார்க்கெட்டிங் வேலை பார்த்து வருகிறார்.

இருப்பினும், அசோக்குமாரின் இணையதள விளம்பரத்தை பார்த்து வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் அசோக்குமாரை தொடர்பு கொண்டால், அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து வந்தார்.

கடந்தசிலதினங்களுக்கு முன் நைஜீரியாவில் உள்ள லாகோஸ் மாநிலத்தை சேர்ந்த நாதன் இகேக்சுக்வு (42) என்பவர் அசோக்குமாரைதொடர்புகொண்டு, கர்நாடகாமாநிலம் பெங்களூரு கே.ஆர்.புரத்தில் தங்கி ஜவுளி தொழில் செய்வதாகவும், மருத்துவ சிகிச்சைக்காக அவசரமாக 500 டாலர் அமெரிக்க மதிப்பிற்கு இந்திய பணம் தேவை என கேட்டுள்ளார்.

அவரை ஈரோடு மேட்டூர் சாலைக்கு வரவைத்து, 500 அமெரிக்க டாலரை பெற்று, 48 ஆயிரம் ரூபாய் வழங்கியுள்ளார்.

அவர் சென்ற பின்னர்தான் அவர் கொடுத்த அமெரிக்க டாலர் போலியானது என தெரிந்தது. இதுபற்றி ஈரோடு எஸ்பி ஆபீசில் அசோக்குமார்புகார்அளித்தார். இதையடுத்து தனிப்படை போலீசார் பெங்களூரு கே.ஆர்.புரத்தில் பதுங்கியிருந்த நாதன் இகேக்சுக்வுவை நேற்று முன்தினம் கைது செய்து நீதிமன்ற உத்தரவுப்படி நேற்று சென்னை புழல் சிறையில் அடைத்தனர். அவர் மீது ஏற்கனவே கோவை காட்டூர் பகுதியில் போலி வெளிநாட்டு கரன்சிகளை வழங்கி ஏமாற்றிய வழக்கு நிலுவையில் இருப்பதாக போலீசார் தெரிவித்தனர்.

## காட்டாற்று வெள்ளத்தால் 10 நாளாக மலை இறங்க முடியவில்லை உடல்நலம் பாதித்த பெண்ணை டோலியில் தூக்கி சென்ற மக்கள்: கொடைக்கானல் அருகே மலைக்கிராமத்தில் சோகம்



கொடைக்கானல், ஆக. 20

காட்டாற்று வெள்ளத்தை கடக்க முடியாததால், உடல்நலம்பாதித்த பெண்ணை 10 நாட்கள் கழித்து ஊர்மக்கள் டோலி கட்டி சிகிச்சைக்கு தூக்கி சென்றசம்பவம் கொடைக்கானல் அருகே மலைக்கிராமத்தில் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலின் கடைக்கோடியில் சின்னூர், சின்னூர் காலனி, பெரியூர் மலைக்கிராமங்கள் உள்ளன. 200க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

தேனி மாவட்டம், பெரியகுளம் வழியாக காட்டுப்பாதையாக மூன்று ஆறுகளை கடந்துதான் இந்த கிராமங்களை அடைய முடியும். கொடைக்கானல் மலைப்பகுதியில் கடந்த 10 நாட்களாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக ஆறுகள், சிற்றோடைகளில் தண்ணீர் அதிகளவில் செல்கிறது. 2 நாட்களுக்கு முன்பு பெரியகுளத்திலிருந்து அத்தியாவசிய பொருட்கள் வாங்கி வந்த இப்பகுதியை சேர்ந்த 3 பேர் கல்லாறு காட்டாற்று வெள்ளத்தில் சிக்கினர். இவர்கள் சுமார் 7 மணி நேரத்திற்கு பின் கயிறு கட்டி பத்திரமாக மீட்கப்பட்டனர். கடந்த சில நாட்களாகசின்னூர்காலனியை சேர்ந்த மாரியம்மாள் (45) உடல் நலம் பாதிக்கப்பட்டு இருந்தார். காட்டாற்று வெள்ளம் காரணமாக அவரை சிகிச்சைக்கு அழைத்து செல்ல முடியவில்லை. ஆற்றில் நேற்று தண்ணீர் அளவு குறைந்ததால் அப்பகுதி மக்கள் அவரை டோலி கட்டி காட்டுப்பாதை வழியாக 10 கிமீ தூக்கி சென்றனர். பின்னர் அங்கிருந்து ஆம்புலன்சில் பெரியகுளத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார். அப்பகுதி மக்கள் கூறுகையில், ''ஆற்றை கடக்க தற்காலிக பாலம் அமைத்து தர வேண்டும்'' என்றனர்.

## திட்டக்குடி அருகே கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் கார் கவிழ்ந்து விபத்து சென்னை குடும்பம் படுகாயம்: மீட்டு சிகிச்சைக்கு அனுப்பி வைத்த அமைச்சர் டிஆர்பி.ராஜா



திட்டக்குடி, ஆக. 20

திட்டக்குடி அருகே கார் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் தம்பதியினர் உள்பட 4 பேர் படுகாயமடைந்தனர். சென்னை துரைப்பாக்கம் பகுதியை சேர்ந்தவர் ராஜ்குமார். இவரது மனைவி காயத்ரி (39). இவர்கள் தங்களது 2 குழந்தைகளுடன் சென்னையில் இருந்து திருச்சி நோக்கி காரில் சென்று கொண்டிருந்தனர். பெரம்பலூர்கடலூர் மாவட்ட எல்லையான ராமநத்தத்தை அடுத்துள்ள எழுத்தூர்அருகேசென்றுகொண்டிருந்த போது முன்னாள் சென்ற இருசக்கரவாகனம் மீது மோதியதாக கூறப்படுகிறது.

இதில் கார் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் உள்ள பள்ளத்தில் தலைக்குப்புற கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் காரில் சென்றவர்கள் படுகாயம் அடைந்தனர். அப்போதுதிருச்சியில் இருந்து சென்னை நோக்கி சென்று கொண்டிருந்த தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தேசிய நெடுஞ்சாலையில் விபத்து நடந்துள்ள சம்பவத்தை பார்த்து இறங்கி சென்று பார்வையிட்டார்.

பின்னர் உடனடியாக அவர், 108 ஆம்புலன்சுக்குதகவல்தெரிவித்தார். இதையடுத்து சம்பவ இடத்துக்குவிரைந்துவந்த ஆம்புலன்சில் படுகாயம் அடைந்தவர்களை பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து தகவலின் பேரில் ராமநத்தம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## களை கட்டப்போகுது பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு அரங்கத்தில் சாகச சுற்றுலா: சுற்றுலாத்துறை புதுமுயற்சி

மதுரை, ஆக. 20

அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு அரங்கத்தில் சாகச சுற்றுலாவை சுற்றுலாத்துறை அறிமுகப்படுத்த உள்ளது. மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் அடுத்த கீழக்கரையில் ஜல்லிக்கட்டு அரங்கம் கட்டும் பணி, கடந்தாண்டு மார்ச் மாதம் துவங்கியது. மொத்தம், 65 ஏக்கரில் ரூ.44 கோடியில் கட்டப்பட்ட இந்த அரங்கத்தை இந்த ஆண்டு ஜன.24ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். அரங்கம் திறக்கப்பட்ட போது நடத்தப்பட்ட ஜல்லிக்கட்டு போட்டிகளை காண்பதற்கு, உள்ளூர், வெளியூர் மட்டுமின்றி வெளிநாடுகளிலிருந்து, 50 ஆயிரம் பார்வையாளர்கள் வந்திருந்தனர்.

அதன்பின், அரங்கத்தில் உள்ள கால்நடைகள் குறித்த அருங்காட்சியகம் மற்றும் நூலகங்கள், மினி தியேட்டர் ஆகியவற்றை பார்வையிட வார நாட்களில் 100 பேரும், வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களில் 500 பேர் வீதம் மாதத்திற்கு, சுமார் 7 ஆயிரம் பேர்வரை வந்து செல்கின்றனர். பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் இருந்த இந்த அரங்கம், கடந்த 9ம் தேதி முதல் சுற்றுலாத்துறை வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அரங்கத்தில் மாவட்டத்தின் சுற்றுலா வருவாயை பெருக்கும்விதமாக சாகச சுற்றுலாக்கள் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

இளம் தலைமுறையினரை கவரும் விதமாக மலையேற்றம், காத்தாடி விழா, ஏர் பலூன், ஜிப் லைன், சைக்களிங் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு அம்சங்கள் இடம்பெற உள்ளன. மேலும், தமிழர்களின் பாரம்பரிய கலைகளை பறைசாற்றும்விதமாக, பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படவுள்ளன. இதற்கான, அரசாணை விரைவில் வெளியாக உள்ளது. அரசாணை வெளியானபின், கலை நிகழ்ச்சிகளும், சாகச சுற்றுலா திட்டமும் படிப்படியாக அறிமுகம் செய்யப்படும். இதனால், பார்வையாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதுடன், சுற்றுலா வருவாயும் உயரும் என, மாவட்டசுற்றுலாத்துறையினர்தெரிவித்துள்ளனர்.

## கூலிக்கு பின் கைதி2 ஐ உடனடியாக தொடங்கும் லோகேஷ் கனகராஜ்



லோகேஷ் கனகராஜின் இயக்குனர் பயணம் மாநகரம் படம் மூலம் தொடங்கியது. மிகச் சிறப்பான கதைக்களத்துடன் மாநகரம் படத்தை கொடுத்து அனைத்து தரப்பினரின் புருவத்தையும் உயர்த்த செய்திருந்தார்.

இவர் திரையுலகில் வந்த சில வருடங்களிலேயே கமல், விஜய் போன்ற உச்ச நட்சத்திரங்களை வைத்து மாஸ்டர், விக்ரம், லியோ, கைதி1 படங்களை இயக்கினார். தற்போது நடிகர் ரஜினிகாந்த்தை வைத்து `கூலி' என்ற படத்தை இயக்கி வருகிறார்.

கடந்த 2019ம் ஆண்டில் நடிகர் கார்த்தியை வைத்து `கைதி' எனும் படத்தை லோகேஷ் இயக்கிருந்தார். இந்த படம் வெளிவந்த போது கைதி2 ம் பாகம் உருவாகும் என அறிவித்தனர்.

ஆனால், லோகேஷ் கனகராஜ் தொடர்ந்து உச்ச நடிகர்கள் படம் இயக்குவதில் பிசியாக இருந்ததால் கைதி2 படம் உருவாகுவதில் தாமதம் ஏற்பட்டது.

இந்நிலையில் அடுத்ததாக பாலிவுட் நடிகர் அமீர் கானை வைத்து `பான் இந்தியா' படத்தை லோகேஷ் கனகராஜ் இயக்க உள்ளதாக கூறப்பட்டுள்ளது. இந்த படத்தை மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின.

ஆனால் லோகேஷ் கனகராஜ் கூலி படம் முடிவடைந்த பிறகு கைதி 2ம் பாகத்திதை தான் இயக்குவார் என்ற செய்தி வெளியாகி உள்ளது.

## மோகன்லால் இயக்கும் `பரோஸ்' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




பிரபல மலையாள நடிகர் மோகன்லால். இவர் தற்போது ஒரு படத்தை இயக்குகிறார். இது இவர் இயக்கும் முதல் படமாகும். இப்படத்திற்கு 'பரோஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த படத்தில் குரு சோமசுந்தரம், மீரா ஜாஸ்மின், ஸ்பானிஷ் நடிகை பாஸ் வேகா, ரபேல் அமர்கோ உட்பட பலர் நடித்துள்ளனர். இந்த படத்தை அந்தோணி பெரும்பாவூர் தயாரிக்கிறார்.

குழந்தைகளைக் கவரும் விதமாக உருவாகும் இந்த படத்துக்கு சந்தோஷ் சிவன் ஒளிப்பதிவு செய்துள்ளார். லிடியன் நாதஸ்வரம் இசை அமைக்கிறார். 3டியில் உருவாகும் இந்த படம், பான் இந்தியா முறையில் வெளியாக இருக்கிறது.

வாஸ்கோட காமாவின் மதிப்புமிக்க பொக்கிஷங்களைப் பாதுகாத்த, பாதுகாவலரான பரோஸ் என்பவரின் வாழ்க்கை கதைதான் இந்த படம் என்கிறார்கள். இந்நிலையில், இப்படம் ஓணம் பண்டிகையை முன்னிட்டு செப்டம்பர் 12ம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் காப்புரிமை பிரச்சினை இருப்பதன் காரணமாக படத்தினை வெளியிட தடை இருந்தது. இதனால் ரிலீஸ் தேதி தள்ளி போனது.

இந்தநிலையில்,நடிகர்மோகன்லால்தனதுஎக்ஸ்தளத்தில்இப்படம்வருகிறஅக்டோபர்3ந்தேதிதிரையரங்குகளில் வெளியாகும் என்ற அதிகாரப்பூர்வ பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

## ரெக்கார்டுகளை முறியடிக்கும் GOAT படத்தின் டிரைலர்

நடிகர் விஜய், இயக்குநர் வெங்கட் பிரபு கூட்டணியில் உருவாகி இருக்கும் படம் தி கிரேட்டஸ்ட் ஆஃப் ஆல் டைம் (தி கோட்). ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்த படத்தில் பிரசாந்த், பிரபு தேவா, அஜ்மல், மீனாட்சி சௌத்ரி மற்றும் பலர் நடித்துள்ளனர்.

தி கோட் படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார். இந்த படத்தின் படப்பிடிப்பு நிறைவு பெற்று பின்னணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. திரைப்படம் வரும் செப்டம்பர் 5 ஆம் தேதி வெளியாகவுள்ளது.

படத்தின் டிரைலர் நேற்று வெளியாகி இணையத்தில் மிகவும் வைரலாகி வருகிறது. தற்பொழுது படத்தின் டிரைலர் யூடியூபில் 20 மணி நேரத்தில் 24 மில்லியன் பார்வைகளை கடந்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் இந்திய சினிமா டிரைலரில் வேகமான 10 லட்ச லைக்குகளை பெற்ற திரைப்படம் என சாதனை படைத்துள்ளது.

ரசிகர்கள் படத்தின் டிரைலரை கொண்டாடி வருகின்றனர்.


## உலகளவில் வசூலில் ரூ. 50 கோடியை கடந்த தங்கலான்



இயக்குநர் பா. இரஞ்சித் இயக்கத்தில் விக்ரம், மாளவிகா மோகனன், பசுபதி மற்றும் பலர் நடிப்பில் உருவாகி இருக்கும் படம் தங்கலான். ஜிவி பிரகாஷ் இசையமைத்துள்ள இந்த படத்தை ஸ்டுடியோ கிரீன் நிறுவனம் தயாரித்துள்ளது. முன்னதாக பல காரணங்களால் இந்த படத்தின் ரிலீஸ் தேதி தள்ளிவைக்கப்பட்ட நிலையில், தங்கலான் திரைப்படம் சுதந்திர தினத்தை ஒட்டி நேற்று உலகளவில் வெளியிடப்பட்டது. பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் தங்கலான் நேற்று ரிலீசானது.

உலகளவில் வெளியான இந்த படம் ரசிகர்கள் மத்தியில் கலவையான விமர்சனங்களை பெற்று வருகிறது. இந்த நிலையில், தங்கலான் படம் முதல் நாளில் மட்டும் ரூ. 26.44 கோடிகளை வசூலித்துள்ளதாக படக்குழு அறிவித்து இருந்தது. இந்த நிலையில், தங்கலான் திரைப்படம் உலகம் முழுக்க 53 கோடியே 64 லட்சம் ரூபாய் வசூலித்து உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. தங்கலான் படத்தின் சர்வதேச வசூல் தொடர்பாக படக்குழு சார்பில் விசேஷ போஸ்டர் ஒன்றும் வெளியிடப்பட்டு உள்ளது.

## பல கோடிக்கு ஏலம் போன தொப்பி




ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் இயக்கத்தில் கடந்த 1984ம் ஆண்டு வெளியான படம் 'இண்டியானா ஜோன்ஸ் அண்ட் தி டெம்பிள் ஆப் டூம்'. இதில், இண்டியானோ ஜோன்ஸ் கதாபாத்திரத்தில் ஹாரிசன் போர்டு நடித்தார். மேலும், கேட் கேப்ஷா, கே ஹுய் குவான், அம்ரிஷ் பூரி உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர்.

இந்நிலையில், இப்படத்தில் இண்டியானோ ஜோன்ஸ் பயன்படுத்திய தொப்பி பல கோடிக்கு ஏலம் போயுள்ளது.

சமீபத்தில், லாஸ் ஏஞ்சல்சில் நடந்த ஏலத்தில் 'இண்டியானா ஜோன்ஸ் அண்ட் தி டெம்பிள் ஆப் டூம்' திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்ட தொப்பி, சுமார் ரூ. 5.28 கோடிக்கு ஏலம் போயுள்ளது. பறக்கும் விமானத்தில் இருந்து இண்டியானா ஜோன்ஸ் கீழே குதிக்கும்போது இந்த தொப்பி பயன்படுத்தப்பட்டது. ஜோன்ஸாக நடித்த ஹாரிசன் போர்டின் ஸ்டண்ட் டூப், டீன் பெராதினி மறைந்ததைத் தொடர்ந்து அவரிடம் இருந்த இந்த தொப்பி ஏலத்தில் விடப்பட்டது.

## ரன்பீர் கபூர், அக்சய் குமார் மற்றும் கான்களின் படங்களை நிராகரித்தது ஏன்? பகிர்ந்த கங்கனா ரனாவத்



இந்தியசினிமாவின்முன்னணிநடிகையாகஉள்ளவர்கங்கனா ரனாவத். பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படதேர்வுகள் மற்றும் வெளிப்படையாக பேசும் இயல்புக்கு பெயர் பெற்றவர். இந்நிலையில், சமீபத்திய பேட்டி ஒன்றில், ரன்பீர் கபூர், அக்சய் குமார் மற்றும் கான்களின் படங்களை நிராகரித்தது ஏன்? என்பதற்கு விளக்கம் கொடுத்திருக்கிறார்.

அவர் கூறுகையில்,

'அவர்களின் படங்களில் கதாநாயகிக்கு இரண்டு காட்சிகளும் ஒரு பாடலும் மட்டுமே இருக்கும். இதனால், நான் அவர்களின் படங்களை நிராகரித்தேன். அனைத்து கான்களும் மிகவும் அன்பானவர்கள், அவர்கள் என்னிடம் தவறாக நடந்து கொண்டதில்லை. இருப்பினும், அவர்களின் படங்களில் நடித்தால் பெண் கதாபாத்திரங்களின் முக்கியத்துவத்தைக் குறைக்கும்.

எனக்குப் பின் வரப்போகும் நடிகைகளுக்கு என்னால் முடிந்ததைச் செய்ய விரும்புகிறேன், எந்த கான்களும் உங்களை வெற்றியடையச் செய்ய முடியாது, எந்த குமாரும் உங்களை வெற்றிபெறச் செய்ய முடியாது, எந்த கபூரும் உங்களை வெற்றிபெறச் செய்ய முடியாது. ஹீரோவால் மட்டுமே ஹீரோயினை வெற்றிபெறச் செய்ய முடியும் என்பதற்கு முன்மாதிரியாக இருக்க நான் விரும்பவில்லை, என்றார்.

## ஜூனியர் பெண்கள் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி அட்டவணைகள் அறிவிப்பு




2வது ஜூனியர் பெண்கள் 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி (19 வயதுக்கு உட்பட்டோர்) அடுத்த ஆண்டு (2025) ஜனவரி 18ந்தேதி முதல் பிப்ரவரி 2ந்தேதி வரை மலேசியாவில் 4 இடங்களில் நடக்கிறது. பெண்கள் உலகக் கோப்பையை மலேசியா நடத்துவது இதுவே முதல் முறையாகும். இதற்கான அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) நேற்று வெளியிட்டது. தென் பசிபிக் பெருங்கடலில் இருக்கும் தீவுகளில் ஒன்றான சமோவா முதல் முறையாக உலகக் கோப்பையில் விளையாட இருக்கிறது.

இதில் பங்கேற்கும் 16 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர்6 சுற்றுக்கு முன்னேறும். நடப்பு சாம்பியன் இந்திய அணி, 'ஏ' பிரிவில் இடம்பிடித்திருக்கிறது. இந்த பிரிவில் வெஸ்ட் இண்டீஸ், இலங்கை, மலேசியா ஆகியவை மற்ற அணிகளாகும். இந்திய அணி தனது முதல் லீக் ஆட்டத்தில் வெஸ்ட் இண்டீசை ஜன.19ந் தேதி சந்திக்கிறது.

தொடர்ந்து 21ந்தேதி மலேசியாவுடனும், 23ந்தேதி இலங்கையுடனும் மோதுகிறது. பலம் வாய்ந்த ஆஸ்திரேலிய அணி 'டி' பிரிவிலும், இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகள் 'பி' பிரிவிலும் அங்கம் வகிக்கின்றன.

## சின்சினாட்டி ஓபன் டென்னிஸ்: சபலென்கா இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்



சின்சினாட்டி ஓபன் சர்வதேச டென்னிஸ் தொடர் அமெரிக்காவின் மாசன் நகரில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் கால் இறுதியில் ரஷியாவின் மிரா ஆன்ட்ரீவாவை வீழ்த்திய 'நம்பர் ஒன்' வீராங்கனை இகா ஸ்வியாடெக் (போலந்து) நேற்று அரைஇறுதியில் 3ம் நிலை வீராங்கனை அரினா சபலென்காவுடன் (பெலாரஸ்) கோதாவில் குதித்தார்.

தனது அதிரடியான ஷாட்டுகளால் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய சபலென்கா 63, 63 என்ற நேர் செட்டில் ஸ்வியாடெக்குக்கு அதிர்ச்சி அளித்ததுடன், சின்சினாட்டி ஓபனில் முதல் முறையாக இறுதிப்போட்டிக்கும் முன்னேறினார்.

## சவுதி சூப்பர் கோப்பை கால்பந்து: இறுதிப்போட்டியில் ரொனால்டோவின் அல் நாசர் அணி தோல்வி



சவுதி சூப்பர் கோப்பை கால்பந்து இறுதிப் போட்டியில் ரொனால்டோவின் அல் நாசர் அணி அல்ஹிலால்அணியுடன்பலப்பரீட்சைநடத்தியது. விறுவிறுப்பாக நடந்த போட்டியின் 44 வது நிமிடத்தில் கோல் அடித்து ரொனால்டோ அல் நாசர் அணியை முன்னிலை பெற செய்தார்.

ஆனால் அதன் பின் அல் நாசர் அணியால் கோல் அடிக்க முடியவில்லை. மாறாக அல் ஹிலால் அடுத்தடுத்து கோல்களை போட்டு தாக்கியது. முடிவில் அல் ஹிலால் 41 என்ற கோல் கணக்கில் ரொனால்டோவின் அல் நாசர் அணியை வீழ்த்தி கோப்பையை தட்டி சென்றது.

அல் ஹிலால் தரப்பில் அலெக்சாண்டர் மித்ரோவிக் 2 கோல்களும், செர்ஜி மிலின்கோவிக் மற்றும் மால்கம் தலா 1 கோல் அடித்து அணி வெற்றி பெற உதவினர்.

## இலங்கைக்கு ஷாக் கொடுத்த அயர்லாந்து முதல் முறையாக இருதரப்பு தொடரை வென்று சாதனை



அயர்லாந்தில் சுற்றுப்பயணம் செய்துவரும் இலங்கை மகளிர் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்று முடிந்த முதல் ஒருநாள் போட்டியில் அயர்லாந்து அணி வெற்றிபெற்ற நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான இரண்டாவது ஒருநாள் போட்டி நடைபெற்றது.

இதில் டாஸ் வென்ற இலங்கை அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் ஆடிய அயர்லாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 255 ரன்களைச் சேர்த்தது. சிறப்பாக விளையாடிய லியா பால் 81 ரன்களை விளாசினார். இலங்கை அணி தரப்பில் கவிஷா தில்ஹாரி, அச்சினி குலசூரிய ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர். இதனையடுத்து இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணிக்கு எதிர்பார்த்த தொடக்கம் கிடைக்கவில்லை. அணியின் டாப் ஆர்டர் வீராங்கனைகள் விஷ்மி குணரத்னே, கேப்டன் சமாரி அத்தபத்து ஆகியோர் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். அதன்பின் இணைந்த ஹர்ஷிதா சமரவிக்ரமா மற்றும் கவிஷா தில்ஹாரி இணை அபாரமாக விளையாடியதுடன் அணியின் ஸ்கோரையும் மளமளவென உயர்த்தினர். இருவரும் தங்கள் அரைசதங்களைப் பதிவுசெய்து அசத்தியதுடன் 3வது விக்கெட்டுக்கு 132 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்தும் அசத்தினர். அதன்பின் 53 ரன்களைச் சேர்த்த நிலையில் கவிஷா தில்ஹாரி தனது விக்கெட்டை இழக்க, அடுத்து களமிறங்கிய அனுஷ்கா சஞ்சீவனியும் ரன்கள் ஏதுமின்றி விக்கெட்டை இழந்து ஏமாற்றமளித்தார். அதேசமயம் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஹர்ஷிதா சமரவிக்ரமா தனது முதல் ஒருநாள் சதத்தைப் பதிவுசெய்து அசத்தினார். ஆனால் அதன்பின் 11 பவுண்டரிகளுடன் 105 ரன்களைச் சேர்த்த நிலையில் ஹர்ஷிதா சமரவிக்ரமாவும் விக்கெட்டை இழக்க, அடுத்து களமிறங்கிய ஹாசினி பெரேரா 14, சஞ்சினி நிசம்சாலா, சுகந்திகா குமாரி, அச்சினி குலசூரிய, அதேஷிகா பிரபோதனி ஆகியோரும் அடுத்தடுத்து சொற்ப ரன்களுக்கு ஆட்டமிழந்தனர்.

இதனால் இலங்கை அணி 48 ஓவர்களில் 240 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. அயர்லாந்து அணி தரப்பில் அர்லீன் கெல்லி 3 விக்கெட்டுகளையும், ஜேன் மாகுவேர் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இதன்மூலம் அயர்லாந்து அணியானது 15 ரன்கள் வித்தியாசத்தில் இலங்கை மகளிர் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றதுடன், 20 என்ற கணக்கில் ஒருநாள் தொடரையும் கைப்பற்றி அசத்தியுள்ளது. இப்போட்டியில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் வெற்றிக்கு காரணமாக இருந்த லியா பால் ஆட்டநாயகி விருதை வென்றார்.

இந்த தொடரை வென்றதன் மூலம் முதல் முறையாக இலங்கைக்கு எதிராக அயர்லாந்து அணி இருதரப்பு தொடரை வென்று சாதனை படைத்துள்ளது.

## 12 ரன் தேவை.. கைவசம் 2 விக்கெட்.. சிக்சர் விளாசி finish செய்த இஷான் கிஷன்.. வீடியோ



தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் சார்பில் புச்சி பாபு நினைவு அகில இந்திய கிரிக்கெட் போட்டி (4 நாள் ஆட்டம்) நெல்லை, சேலம், கோவை, நத்தம் ஆகிய இடங்களில் நடந்து வருகிறது. இந்த போட்டியில் பங்கேற்றுள்ள 12 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு மோதுகின்றன. இதில் மத்தியபிரதேசம் ஜார்கண்ட் அணிகள் இடையிலான லீக் ஆட்டம் (ஏ பிரிவு) நெல்லையில் நடந்தது. முதல் இன்னிங்சில் மத்தியபிரதேசம் 225 ரன்னும், ஜார்கண்ட் 289 ரன்னும் எடுத்தது. 64 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்சை ஆடிய மத்தியபிரதேசம் 238 ரன்களில் அடங்கியது. இதையடுத்து 175 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ஜார்கண்ட் 3வது நாள் முடிவில் ஒரு விக்கெட்டுக்கு 37 ரன்கள் எடுத்திருந்தது. இந்த நிலையில் 4வது மற்றும் கடைசி நாளான நேற்று தொடர்ந்து ஆடிய ஜார்கண்ட் அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிக்கொடுத்தனர். இறுதி கட்டத்தில் 8 விக்கெட்களை ஜார்கண்ட் அணி இழந்திருந்தது. கடைசி 12 ரன்கள் தேவை என்ற நிலையில் இஷான் கிஷன் 2 சிக்சர்களை விளாசினார். இதனால் 54.4 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 175 ரன்கள் எடுத்து 2 விக்கெட் வித்தியாசத்தில் த்ரில் வெற்றியை ஜார்கண்ட் அணி ருசித்தது. கேப்டன் இஷான் கிஷன் 41 ரன்களுடன் களத்தில் இருந்தார். கேப்டனாக இஷான் கிஷன் அணியை வெற்றி பாதைக்கு அழைத்து சென்று 2 சிக்சர்களுடன் முடித்து வைத்தது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.